குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.466/2025

அ.சா.4

2026–ம் ஆண்டு ஜுன் 29–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 4–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரசு | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னண்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.42 மணி,

Accused A1)Sekar, A2)Selvi, A3)Sarath are present. Advocate Ms.Subashini present for Advocate Mr.Thiyagarajan for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.06.2015–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சிவலிங்கம் மற்றும் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த திரு.செங்கோடன் ஆகியோர்களது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.06.2015–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சிவலிங்கம் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது பகல் 12.00 மணியளவில் அதற்கு முன்னதாக மணிபால் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி ஏழுமலை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அதன் பேரில் நிலைய குற்ற எண்.526/2015 சட்டபிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.5, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.29 17:41:34 +0530

3. பின்பு முதல் தகவல் அறிக்கையின் நகலினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் செங்கோடன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் செங்கோடன் என்பவர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 13.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்திவேல் மற்றும் கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அன்றைய தினமே மாலை 17.00 மணியளவில் முத்துநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே வைத்து எதிரி சேகர் என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு மற்ற எதிரிகள் செல்வி மற்றும் சரத் ஆகிய இருவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை. பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி ஏழுமலை என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய மணிபால் தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு.அசோக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

5. மருத்துவர் மேற்படி சாட்சி ஏழுமலை என்பவபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதன் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 323, 324, 506(2) இதச விலிருந்து 294(பி), 323, 325, 506(2) இதச ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ( **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

6. பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் சிவலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கில் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.29 17:41:37 +0530

7. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.51 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.29 17:41:41 +0530